பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka


பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்


# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 21 வெள்ளிக்கிழமை 04-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 135


அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகர் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1895)


## உத்தியோகப்பற்றற்ற யுத்தநிறுத்தத்திற்கு அரசு தயார்

# புலிகள்மீதுவலிந்துதாக்குவதில்லை

# எரிக்சோலிடம் - ஜனாதிபதி உறுதி

### தூதுவர் நோர்வே விரைவு

(நமது சிறப்பு நிருபர்)

அரசாங்கத்தையும் - விடுதலைப்புலிகளையும் சமாதானப் பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்கு 'யுத்தநிறுத்தம்' அவசிய தேவையாக இருப்பதை நோர்வேயின் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிக்காவுடனான இரண்டாவது சுற்று சந்திப்பின் போது வலியுறுத்தியதை அடுத்து உத்தியோகப் பற்றற்ற யுத்தநிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ள அரசு சம்மதித் துள்ளது.

இதன்பிரகாரம் அரசாங்கம் புதிய தாக்குதல்களை எதனையும் விடு தலைப்புலிகளுக்கு எதிராகத் தொடுப்பதில்லை என தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஊடகங்கள் தகவல்கள் வெளி யிட்டுள்ளன.

இலங்கை அரசு உத்தியோகப்பற்றற்ற யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு நோர்வேயின் சிறப்பு தூதுவர் எரிக்சோல் ஹெய்மிடம் விருப்பம் தெரிவித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நம்பகமாகத் தெரிவித்துள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் சிறப் புத்தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் நேற்று நோர்வே புறப்படும்முன் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசிய போதே அரசின் இந்த விருப்பத்தை ஜனாதிபதி சந்தி

→ 8ஆம் பக்கம் பார்க்க

### வன்னிப் பிரதேசத்தில் படையினர் குவிப்பு

தென்னிலங்கையில் இருந்து பெருந் தொகையான படையினர் வாகனங்கள மூலம் நேற்று வன்னிப்பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் அனுராதபுரத்தில் இருந்து சுமார் 25க்கும் அதிகமான இராணுவ ட்ரக் வண்டிகள், லொறிகள் பஸ்வண்டிகள் மூலம் இவர்கள் வன்னிப் பிர [8ஆம் பக்கம் பார்க்க]

க. பொ. த (உயர்தர) மாணவர்களுக்கு

### புலமைப்பரிசில் திட்டம் அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் க. பொ. த உயர் தரத்தில் கல்வி பயிலும்வசதி குறைந்த மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில திட்டம் ஒன்றினை அமுல்ப் படுத்தவுள்ளதாக வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு அறிவித்துள்ளது

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப் பின்பேரில் நடைமுறைப் படுத்தப் படவுள்ள இத்திட்டத்தின் கீழ் பயன்பெறவுள்ள மாணவர்களின் விபரங்களை சேகரிக்குமபடி கல்விஅதிகாரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### எரிக்சோலின் பேச்சுக்கள் பயன் தரக் கூடியது

#### நோர்வேதூதரக அதிகாரிகருத்து

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை குறித்தும், விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் தொடர்பாகவும் நோர்வேயின்விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் ஜனாதிபதி உட்பட மற்றும் தலைவர் களுடன் நடத்திய பேச்சுக்கள் பயனுடையதாக அமைந்திருந்த தென நோர்வே தூதரகத்தைச் சேர்ந்த தோமஸ் நேற்று தெரிவித் துள்ளார்.

மூன்று நாள் உத்தியோக பூர்வவிஜயம் ஒன்றை மேற்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### பிரேமதாஸாவின் மருமகனுக்கு பிணை

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையில் இருந்து காணாமல் போன பெறுமதியான கலைப் பொருள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற பிரேமதாஸாவின் மருமகன் றொகான் ஜெயக்கொடியிடம் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சந்தேகநபரான றொகான்ஜெயக்கொடியைஒருலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. (ம)

### பொலிஸார் துப்பாக்கிச்சூடு இருவர் பலி, மூவர் காயம்

(கொழும்பு)

எம்பிலுப்பிட்டியாவில் வாகனத்தில சென்றோர் மீது பொலிசார் சுட்டதில் இருவர் கொலைப்பட்டனர்மூவர்காயமடைந்தனர் இச்சம்பவம் நேற்றுஇடம்பெற்றது.

வேகமாக வந்த வாகனமொன்று பொலிஸ் காவலரணில் மறித்தபோது அதுநிற்காமல் ஓடியதை அடுத்து பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்

(8ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாநகரசபையின் ஆணையாளராக இராமலிங்கம் நியமனம்

[திருகோணமலை]

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய ஆணையாளராகஎஸ். இராமலிங்கம் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவால் நியமிக்கப்பட்டுள்ளார்

பதில் ஆணையாளராகக் கடமையாற்றிய இராசா தணிகாசலத்திற்கு மட்டக் களப்பிற்கு மாற்றம் வழங்கப் பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை கடந்தமாதம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த விசாரணை அதிகாரி நாகேஸ்வரன் யாழ் மாநகர சபை தொடர்பான தனது

→ 8ஆம் பக்கம் பார்க்க

### படையினர் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளாலிப்பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைத்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மாவனல்ல பகுதியில் 55 கடைகள் தீக்கிரை

(மாவனல்ல)

மாவனல்ல இனக் கலவரத்தின் போது சுமார் 55 வர்த்தக நிலையங்களும் 20 வீடுகளும், 3 பள்ளி வாசல்களும் தீககிரையாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான ஒரு இறப்பர் தோட்டமும் அழிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்றுப் பகல் தளர்த்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணிக்கு மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாக பிந்திய செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (வ)

### படையினரின் பவுஸர் மோதியதில் ஒருவர் பலி

#### பண்ணை வீதியில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் கடற்படையினருக்கு சொந்தமான தண்ணீர் பவுஸர் ஒன்று மோதியதால் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத் திலேயே பலியானார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 4-30 மணியளவில் இடம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர் அனுருத்தவின் கூட்டத்தில் துப்பாக்கிநபர்களால் பரபரப்பு!

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தலைமையில் கண்டி அஸ்கிரிய பொலிஸ் மைதானத்தில் பொதுஜனஐக்கிய முன்னணியின் மேதினக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென மைதானத்துக்குள் துப்பாக்கியுடன் புகுந்த இருவரால் பெரும் பரபப்பு ஏற்பட்டது.

தன்னியக்கத் துப்பாக்கிகள் சகிதம்புகுந்த இருவரையும் அமைச்சரின் பாதுகாப்பு பொலிசார் மடக்கிப்பிடித் தனர்.

மேற்படி இருதுப்பாக்கி நபர்களும் விவசாய பிரதி அமைச்சர் சமிந்ததிஸநாயக்காவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்தது.

இவ்விருவரும் ஏன்துப்பாக்கிகளுடன் கூட்டமேடையை நோக்கி வந்தனரென்து சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கண்டிபொலிஸ்இன்ஸ்பெக்டர் மகேந்திரன தெரிவித்துள்ளார். (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளுக்கு உதவும் முகாமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

# இராணுவ அதிகாரி எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் பொது முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் ஆகியோர் இராணுவத்தினரால் பலமானமுறையில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு 233 வதுபடையணித் தலைமையகத்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றிலேயே 233 வதுபடையணியின் கட்டளைஇடும் அதிகாரி கேணல் வீ.ஆர்.எஸ்.அன்ரனிஸ் எச்சரிக்கைவிடுத்துள்ளார் இக்கூட்டத்தில் பல கூட்டுறவுச்சங்க முகாமையாளர்கள், கிளைமுகாமையாளர்கள் ஆகியோருடன் மாவட்ட அரச அதிபர் மௌனகுருசாமியும் கலந்து கொண்டார்.

விடுதலைப்புலிகளுக்கு நிதி உதவியும், மற்றும் வசதிகளையும் இவர்கள் செய்து கொடுத்து வருகிறார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவ்வாறு இராணுவத்தினரால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது இந்தஎச்சரிக்கையை மீறி செயற்படுவோர் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்தஇராணுவ அதிகாரி எச்சரித்துள்ளார்.

# பண்ணிசைமனனப்போட்டி வெற்றி பெற்றோர் விபரம்

[இணுவில்]

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு திருநெறிய தமிழ் மறைக் கழகத்தால் நடத்தப்பட்ட பண்ணிசைப் மனனப் போட்டியில்வெற்றி பெற்றவர்களது பெயர் விபரம் வருமாறு.

**ஆரம்பப் பிரிவு**

1 ஆம இடம் ச. துவனிகரா (கொண்டாவில் இந்துமகா வித்தியாலயம்.)

2 ஆம் இடம் க. துசாயினி [இணுவில் மத்திய கல்லூரி]

3 ஆம் இடம் ச. யதுகலன் [மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை]

**கீழ்ப் பிரிவு**

1 ஆம் இடம் தெ.பவனுஜா [வேம்படி உ.பா]

2 ஆம் இடம் அ அமிர்த சிந்துஜன் [இளந்தொண்டர் சபை இணுவில்]

3 ஆம் இடம் கு. அனுசன் [இணுவில் இந்துக் கல்லூரி]

**மத்திய பிரிவு**

1 ஆம் இடம் ஸ்ரீ. தாரணி (யாழ். இந்துமகளிர்கல்லூரி)

2 ஆம் இடம் வி. ஜீவிகா [யூனியன் கல்லூரி]

3 ஆம் இடம் ஜெ. வைஷ்ணவி [மெமோறியல் ஆ பா]

3 ஆம் இடம் அ. அமிர்தலோஜனன் [கொக்குவில்இ க]

**மேற் பிரிவு**

1 ஆம இடம் ந தனசொரூபி [கொக்குவில் இ க]

2 ஆம் இடம் கு. ஜெகதீசன் [யூனியன் கல்லூரி

3 ஆம் இடம் ச. லக்மன் (யூனியன் கல்லூரி) [உ]ந9-

# மருந்து கட்டும் துணிக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மருந்து கட்டும் துணிக்கு நீண்ட நாட்களாக தட்டுப்பாடு நிலவி வருகிறது.

வைத்தியசாலை வளவினுள் மருந்து கட்டும் துணியை கொண்டு வரவும் எனும் வாசகம் எழுதித் தொங்கவிடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. (உ)

# மாவனல்ல கலவரம் கண்காணிக்க குழுநியமனம்

(கொழும்பு)

மாவனல்ல சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்கள் படைத்தளபதிகளைப் பணித்துள்ளார்.

மாவனல்லசம்பவம்தொடர்பாக நிலைமைகளை நேரில் சென்று கண்காணிக்க விசேட குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

அமைச்சர் அலவி மௌலானா, பிரதியமைச்சர்பஜித் நீர்வடிகாலமைப்பு சபைத் தலைவர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லஹ் ஆகியோர் அக்குழுவில் அடங்குகின்றனர்.

இனக்கலவரங்களைத் தூண்டக்கூடிய செயல்களில் ஈடுபவோர் மற்றும் வதந்திகளைப் பரப்புவோரை உடனடியாகக் கைது செய்து அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பொலிஸாரைப் பணித்துள்ளார்.

இது தொடர்பாகப் படையினருக்கு உதவுமாறு சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ)

# வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் நாளைசனிக்கிழமைகாலை 10 00 மணிக்கு பூமணியின் கருவேலம்பூக்கள் எனும் திரைப்படம் புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் பங்குபற்ற முடியும் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)


இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்தும்

## புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கும், கலந்துரையாடலும்

**இடம்:** யா/கொக்குவில் இந்துக் கல்லூரி கொக்குவில்

**காலம்:** 2001-05-08ந் திகதி செவ்வாய்க்கிழமை

**நேரம் :** மு.ப. 10.00-பி.ப. 3.00

**தலைவர்:** திரு. சா. தியாகலிங்கம்

**விடயங்கள்:**

01. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய பொது நோக்கு (திரு. மா. சின்னத்தம்பி, முதுநிலை விரிவுரையாளர். கல்வியியல் துறை, யாழ்ப்பாணம்)
02. பாடசாலை மட்ட மாணவர் கணிப்பீடு. (திரு. அ. பஞ்சலிங்கம், ஓய்வு பெற்ற அதிபர், யா/இந்துக் கல்லூரி)
03. கல்விச்சீர்திருத்த அமுலாக்கலில் யதார்த்தநிலை, (திரு. ப. முத்துலிங்கம், அதிபர், யா/நாவற்குழி மகா வித்தியாலயம்)
04. ஆசிரியர் தரக் கணிப்பீடு. (திரு. கா. நடராசா, அதிபர், யா/பண்ணாகம் மகா வித்தியாலயம்)
05. கலந்துரையாடல் ஆசிரிய கணிப்பீட்டின் சாதக பாதக நிலைமைகள்/ ஆசிரிய உள்ளீர்ப்பு பிரச்சினைகள்
06. நன்றியுரை - செயலாளர்

பங்கு பற்றி பயன் பெறுமாறு, ஆசிரியர்கள், அதிபர்கள், ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்

(கி/1951)


# பயிற்சிப் பாசறை

[யாழ்ப்பாணம்]

இலங்கை- முதலுதவி சங்க தொண்டர்களுக்கான பயிற்சிப்பாசறை எதிர்வரும்12 ஆம் திகதி 9.00 மணிதொடக்கம் மறு நாள் 13 ஆம் திகதி பி.ப 3.00 மணிவரை வடமராட்சிப் பகுதியில் நா. போஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. [உ-104]

# இராசி பலன்

04 - 05 - 2001
(சித்திரை 21, வெள்ளி)
துவாதசி ந.இ 12.12 வரை
உத்தமம் பி.ப 4.28வரை
ராகுகாலம் 1 26-11.56
நல்லநேரம் 5.56 - 7.26
சித்தாமிர்தம்

**மேடம்**

சந்தோசமானசம்பவம். சத்துருஜெயம், வியாதி சுகமடைதல், காரியநன்மை

**இடபம்**

குடும்பக்கவலை, வியாதி, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**

தன்நம்பிக்கைக் குறைவு, அரச நன்மை, காரிய தாமதம், உடல்நலக்குறைவு.

**கடகம்**

இனியசம்பவம், தனவரவு, வாக்கு மேன்மை, அன்னியர் சந்திப்பு.

**சிங்கம்**

பொருள் விரயம், வாக்குப் பகை, செல்வாக்கு குறைவு, நிலைமாற்றம்,

**கன்னி**

ஜனவசியம், நண்பர்கள் உதவி, சயனசுகம், முயற்சிபலிதம்.

**துலாம்**

காரிய அலைச்சல், தனவிரயம், உணர்ச்சி வசப்படல் திடீர்நன்மை.

**விருச்சிகம்**

நினைத்தகாரியம் கைகூடும் தனலாபம்கௌரவம், குடும்ப சுகம்.

**தனுசு**

தொழில் நன்மை, சுப நிகழ்ச்சி, பணியாளர் உதவி முயற்சி கைகூடும்.

**மகரம்**

மனப்பதட்டம், புதிய திட்டம், உடல் உபாதை, காரிய தாமதம்.

**கும்பம்**

எதிர்பாராத அச்சம், உடல் நலக்குறைவு, திடீர் நன்மை, காரியதாமதம்.

**மீனம்**

வாகனவசதி, நல்ல உணவு கிடைத்தல், தனவரவு, நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

# கௌரவமான தீர்வின்மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைகளை கௌரவமான தீர்வொன்றின் மூலம் வழங்குவதன் ஊடாக இந்நாட்டில் சமாதானத்தை உருவாக்க முடியும்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணிக் கட்சியின் பொதுச்செயலாளர் வாசுதேவநாணயக்கார வவுனியாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்துள்ளார்.

போரினால் உயிர்கள் இழந்ததே மிச்சம் வேறு ஒன்றும் சாதிக்கப்படவில்லை.

யுத்தத்தினால் அழிவுதான் ஏற்படுகிறது. வடக்குக் கிழக்கு மக்கள் மட்டுமன்றி தென்னிலங்கை மக்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# தென்மராட்சி வலயத்தில் நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் வழங்கப்படும்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் இன்றும், நாளையும் காலை 9மணிக்கு தென்மராட்சிக் கல்விவலயத்தில் வைத்து வழங்கப்படும்.

இவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். ந-23

# தொண்டராசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையில் நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கோட்டத்தைச்சேர்ந்த தொண்டர்ஆசிரியர்களுக்கு நேற்று நடைபெற இருந்த நேர்முகப்பரீட்சை இன்று காலை8மணிக்கும் இன்று காலை8.30மணிக்கு நடைபெறவிருந்த சண்டிலிப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்றுமுற்பகல் 11மணிக்கும் வலிகாமம் கல்விவலயத்தில் நடைபெறுமென மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (ந)

# மெய்வன்மை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிடையே வலயமட்டத்தில் நடைபெற்ற மெய்வன்மை போட்டியில் முதலாம் இடத்தை சங்கானைக் கோட்டமும், இரண்டாம் இடத்தை சண்டிலிப்பாய் கோட்டமும் மூன்றாம் இடத்தை தெல்லிப்பழைக் கோட்டமும் 4 ஆம் இடத்தை உடுவில் கோட்டமும் பெற்றுள்ளன. (உ-2)

# எழுதுவினைஞர் நியமனம்

உடுவில் பிரதேச செயலகத்திற்கு கடந்த 2 ஆம் திகதியிலிருந்து இரண்டு எழுதுவினைஞர்களை மத்திய அரசு நியமித்துள்ளது.

ரீ. றொட்றிக்கோ, என். வர்ணயோகர் ஆகிய இருவருமே நியமிக்கப்பட்டுள்ளனர். [உ-2]


யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

## பொதுக் கூட்ட அறிவித்தல்

**இடம்:** இல. 3 பஸ்ரியான் சந்தி கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**காலம்:** 10. 5. 2001 வியாழக்கிழமை

**நேரம்:** முற்பகல் 11. 00 (புதிய நேரம்)

**விடயம்:** சங்க உப விதிகள் பற்றி ஆராய்தல்

அங்கத்தவர்களும் மற்றும் வெதுப்பக உற்பத்தியாளர்களும் கலந்து கொள்ளவும்

நிர்வாகம்

சங்கப்பணிமனை
இல. 3 பஸ்ரியான் சந்தி,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(2989)

## செய்தித் துளிகள்

### சுழல் கேடய சுற்றுப்போட்டி

(மந்திகை)

அமரர் நா. செல்வமாணிக்கம் ஞாபகார்த்தமாக தும்பளை, தம்புறுவளை விளையாட்டு கழகம் மென்பந்து துடுப்பெடுத்தாட்ட சுழல் கேடய சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டியில்பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்களை தம்புறுவளை விளையாட்டுக்சழகத்துடன் 5 ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளுமாறு கழகத்தின் செயலர் இ. மகிந்தராஜ் அறிவித்துள்ளார்: (உ-23)

### பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சிமெந்து நிறுவனத் தொழிற் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணியளவில் சங்கத்தின் தற்காலிக அலுவலகம் அமைந்துள்ள இணுவிலில் இடம் பெறவுள்ளது.

மேற்படி பொதுக்கூட்டத்தில் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் சகல தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

### உரிமத்தகடு வழங்கல்

(மல்லாகம்)

வலி தெற்கு பிரதேச சபையின் மருதனார் மட உபகாரியாலயத்தினால் துவிச்சக்கர வண்டி உரிமத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தவிர உரிமத்தகடுகள் பெறாதோர் மீது சபை ஊழியர்கள் நடவடிக்கை எடுப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். (உ-122)

### திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்க யாத்திரைஸ்தலங்களில் ஒன்றாகிய பண்டத்தரிப்பு புனித் பற்றிமா அன்னை ஆலய திருநாள் திருப்பலி. இன்றுகொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது;

எதிர் வரும் 13 ஆம் திகதி திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச் சொரூபஆசிர்வாதமும் இடம் பெறும். (உ-7)

### விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ மல்லாகம்கனிஷ்டவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு பாடசாலை அதிபர்செல்விசி.கெங்காமலர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில், தெல்லிப்பழை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த திருமதி இ. இராமலிங்கம் கௌரவவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ-15)

### பயன் தரு மரங்கள் தறிப்பு

(மந்துவில்)

தென்மராட்சிப் பகுதியில் பயன்தரு மரங்கள் தறித்துச் செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

வேம்பு, புளி, நாவல்,மா போன்ற மரங்கள் தறித்து எடுத்துச் செல்லப்படுவதை பரவலாக காண முடிகிறது. (உ-39)

### இறுதிச் சுற்றுப் போட்டி

[மந்திகை]

சிவராஜ் ரேடிங் கோ ஆதரவில் வடமராட்சி விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றும் கரப்பந்தாட்ட இரண்டாவது சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

இறுதி தெரிவுப் போட்டி எதிர்வரும் 7ம் திகதி திங்கட்கிழமை மாலை தும்பளை நெல்லண்டை அப்பன்கோவிலடி மைதானத்தில் நடைபெறும். (உ-23)

### தொலைக் காட்சி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் பொது நூலகத்திற்குபிரதேச சபையால் புதிய தொலைக்காட்சி வழங்கப்பட்டுள்ளது. (உ-104

### புகையிலையில் புள்ளித் தாக்கம்

(சங்கானை)

கடந்த சில தினங்களின் முன் பெய்த தொடர் மழை காரணமாக சங்கானைப் பிரதேசத்தில் நல்ல நிலையில் வளர்ந்திருந்த புகையிலைக் கன்றுகள் புள்ளி நோய்த் தாக்கத்திற் குட்பட்டுள்ளன. (உ-123)

### ஜயகோல்ட் புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஒரு தொகுதி நோயாளர்களுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கப்பலான ஜய கோல்ட் நேற்று திருமலை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது. (உ-104)

### சிறைச்சாலைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா நேற்றைய தினம் யாழ் சிறைச்சாலைக்கு சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுயாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிட்டதுடன் அவர்களின் குறைநிறைகளையும் கேட்டு அறிந்து சொண்டார்; (உ-10-2)

### அலங்கார உற்சவம்

(மந்திகை)

கற்கோவளம் கும்பிஅம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ இறுதி நாள் எதிர் வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசைகளுடன் ஆரம்பமாகும்.

அன்றைய தினம் கற்கோவளம் வேணு கானசபர் மன்றத்தின் காத்தவராயன் சிந்து நடை கூத்தும் இடம் பெறும். [உ-23]

### தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றையதினம் காங்கேசன் துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் குடாநாட்டிற்கான 381 வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இக் கப்பலில் குடாநாட்டில் இருந்து 57 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன; (உ-10)

## குடிசையில் வாழும் வன்னி மக்களோடு ஒப்பிடுமிடத்து இங்கு குறைகள் இருப்பதாய் கூறமுடியாது

### பீடாதிபதி கமலநாதன் தெரிவிப்பு

(அரியாலை)

ஒருவர்மீது ஒருவர் குற்றம் காண்பதும் அதிகப் பிரசங்கத்தனமும் தான் இன்று ஒருவர் இலகுவில் செய்யக்கூடிய வேலையாகவுள்ளது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமைகளில் முழுமையான ஈடுபாட்டோடு செயற்படும் போதுதான் வெற்றிகிடைக்கிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓராண்டுப் பூர்த்தி நாளான நேற்று ஆசிரிய மாணவர்கள் ஒழுங்கு செய்த விழாவில் உரையாற்றிய கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

காலையில் இடம்பெற்ற சமய வழிபாடுகளைத் தொடர்ந்து இந்து மாமன்ற பிரதிநிதி ஆர். விஜேந்திரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பீடதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்று யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பிறந்தநாள். பல்வேறு சிக்கல்கள் தடைகள் யாவற்றையும் கடந்து அது தலை நிமிர்த்திப் பார்ப்பதற்கு அயராது உழைத்த அனைவருக்கும் இந்நேரத்தில் நன்றி கூற வேண்டும்.

யாழிலும் சரி வடக்கு - கிழக்கிலும் சரி கல்வியின் நிலை இன்று சரிந்து செல்கிறது இதைத் தடுத்து நிறுத்தி புதிய கல்விக் கலாசாரத்தை உருவாக்க கல்வியியற் கல்லூரிகளால் தான்முடியும்.

அந்த வகையில் எமதுமாணவர்களும் உளத் தூய்மையோடு உணர்வு பூர்வமாக செயற்பட்டு எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

டாக்டர் மு வரதராசன் 'காலுக்குச் செருப்பில்லையே என்று கவலைப்படாது கால் இல்லாதவனை பார்த்து நீ திருப்தி கொள்'என்று குறிப்பிட்டது போன்று மட்டுப்படுத்தப்பட்ட குறைந்தவளங்களோடு இருந்தாலும் உறுதி தளராது நீங்கள் திருப்தியோடு செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

எமக்கு மிகுந்தஇடர்ப்பாடுகள் இருந்தாலும்,வன்னியில் வாழும் எமது மக்கள் மர நிழல்களிலும் ஒட்டைக் குடிசைகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்நேரத்திலே அவர்களோடு ஒப்பிடும்போது எமக்கு குறைகள் ஏதும் இருப்பதாகக் கூறமுடியாது என மேலும் குறிப்பிட்டார் [உ-106]

### அனுமதி அட்டைகளை வலய அலுவலகத்தில்

[மந்திகை]

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 89 பேருக்குமான நேர்முகப் பரீட்சை அனுமதி அட்டைகள் வலயக் கல்வி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முகவரிகள் தெளிவின்மையால் சிலரின் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்க முடியாமையால் வலய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்களை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு வலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-23)

### இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம பழம்பதி அருள்மிகு முருகன் ஆலயஇரதோற்சவம் எதிர்வரும 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 7 ஆம்திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும்நடைபெறவுள்ளன. (செ)

### அஞ்சலியும் கருத்துரையும்

(யாழ்ப்பாணம்)

மறைந்த பொதுவுடமைவாதி பாரதிநேசன் வீ. சின்னத்தம்பியின் அஞ்சலியும் கருத்துரையும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகாலை9,00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் அஞ்சலி நிகழ்வில், அஞ்சலி உரையை க. தணிகாசலம், கருத்துரையை சி. கா. செந்தில்வேல் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ)

### புதிய தபாலதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதம தபாலகத்தில் பிரதம தபால் அதிபராக இருந்த எஸ்.மார்க்கண்டன் கல்முனைக்கு மாற்றப் பட்டதை அடுத்து யாழ்.பிரதம தபாலகத்திற்கு சி.ஞானசீலன் பிரதி பிரதம தபால் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன் மேற்பார்வை அதிகாரியாக இருநதவர் என்பது குறிப்பிடத்தக்கது, (உ-10,2)

### தென்மராட்சி மாணவர்க்கு பாடநூல் விநியோகம்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்று இடம்பெயர்வின் பின் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல் விநியோகம் இன்று 10.00 மணிக்கு மருதனார் மடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைதது இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை அதிபர்கள் விபரங்களைச்சமர்ப்பித்து பாடநூல்களை பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்வி பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

அதேவேளை, வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல் விநியோகம் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் வைத்து இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

### இவ்வருட உலகத்தமிழ் மாநாடு மலேஷியாவில்

[கொழும்பு]

இவ் வருடததிற்கான உலகத் தமிழ் மாகாநாடு எதிர் வரும் ஜூன் மாதம் மலேஷியாவில் நடைபெறும் என தற்போது அறிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பில் நடாத்தப்படும் என எதிர் பார்க்கப்பட்டாலும் நாட்டுச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டே இவ் விழா மலேஷியாவில் நடைபெறவுள்ளது என உலகத்தமிழ் தகவல் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ அறிஞர்கள், கலைஞர்கள, கவிஞர்கள் தமிழ் ஆவலர்கள எனப்போர் மேற்படி விழவில் கலந்து கொளளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் இலங்கையர்கள், இலங்கை இந்து சமய கலாசார அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர் [உ.-9]

### குடாநாட்டில் குறைந்தளவு தபால்உறைகள்கையிருப்பில

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் பெறுமதிமிக்க முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1000,500,20 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கே தட்டுப்பாடு நிலவிவருகிறது.

தவிர, தபால் உறைகளும் குறைந்தளவே கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ- 0,2)

### முதலுதவி, வீதி ஒழுங்கு விரிவுரையாளர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச்சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலுதவி, வீதிஒழுங்கு விரிவுரையாளர் பயிற்சி நெறி திட்டமிட்டபடி யாழ். மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுளளது.

மேற்படி பயிற்சிநெறிக்கு இதுவரை விண்ணபபிககாத ஆசிரியர்களும் பயிற்சி நெறியில் கலந்துகொளள முடியுமென்று சங்கத்தின் உதவிப் பயிற்சி தலைவர் தெரிவித்துளளார், (உ-15)

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல-55 தொகுப்பு ரீ. மயூரன்

### பொது உளச்சார்பு

★ தடித்த எழுத்தில் உள்ள சோடிக்கு அதிக பொருத்தமான சோடியை தரப்பட்ட 4 சோடிகளில் இருந்து தெரிவுசெய்க.

01. தலை:தொப்பி
1) மயிர்:மண்டையோடு 2) கழுத்து:மாலை
2) விரல்:மோதிரம் 4) பாதம்:சப்பாத்து

02. பேனை:எழுதுதல்
1) மண்வெட்டி:பயிர்ச்செய்கை
2) வாள்:மரம்
3) கத்தி:வெட்டுதல்
4) பாட்டு:பாடுதல்

03. சைக்கிள்:சக்கரம்
1) லொறி:சாரதி 2) கப்பல்:நீர்
3) வண்டி:எருது 4) மனிதன்:கால்

04. விளக்கு:ஒளி
1) ஒளி:இருள் 2) பூ:நறுமணம்
3) விளக்கு:எண்ணெய் 4) சந்திரன்:இரவு

05. நரி:தந்திரம்
1) தேனி:சுறுசுறுப்பு 2) பூனை:எலி
3) மயில்:அழகு 4) எறும்பு:சிறுமை

★ பின்வரும் சொற்றொடர் ஏதோ ஒரு விதத்தில் ஒழுங்காக்கப்படக்கூடியது ஒவ்வொரு சொற்தொடரையும் ஒழுங்காக்கி நடுவில் வரும் சொல்லைத்தெரிவு செய்க.

06 5, 3, 2, 7, 9
07. Km, cm, m, mm, nm
08 சொல், எழுத்து, வாக்கியம், பந்தி, கட்டுரை
09. தவழுதல், நடத்தல், இருத்தல், நிற்றல், ஓடல்
10. பி.ப. 3.30, மு.ப. 9.00, பி.ப. 3.00 நள்ளிரவு 12.00 மதியம் 12.00

★ கீழே தரப்பட்ட எண் தொடரில் அடுத்து வரும் எண்களை கண்டறிக

11. 2, 3, 5, 8, ————, ————
12. 0.1, 1, 10, 100, ————, ————
13. 21, 6, 28, 11, 35, ————, ————
14. 25, 5, 16, 4, 9, 3, ————, ————
15. 1.09, 1.18, 1.27, 1.36, 1.45, ————, ————

★ பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஒரு கடையில் 0-5 வரையான தானங்களுக்கு பின்வரும் இரகசியக் குறிகள் பயன்படுத்தப்பட்டன.
0=★, 1=●, 2=×, 3=+, 4=—, 5=÷

16. 225 ரூபா பொருளுக்கு என்ன குறியீடு பயன்படுத்தப்பட்டிருக்கும்?
17. ●★★ என்ற குறியீடு ஒரு பொருளில் காணப்பட்டது அதன் விலை என்ன?
18. ÷★★★ என குறிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு 10% கழிவு வழங்கப்பட்டால் பொருளின் விலை என்ன?
19. ×★ எனக் குறிக்கப்பட்ட பொருளுக்கு 10 ரூபா குறைத்து விலை சொல்லப்பட்டால் சொன்ன விலை என்ன?
20. ஒருவரின் சிட்டையில் பின்வரும் தொகைகள் காணப்பட்டன ●×, ××★, +×★, —★ அவர் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை எவ்வளவு?

### பொது அறிவு

★ பின்வரும் சம்பவங்கள் நிகழ்ந்த ஆண்டைத் தருக.

21. பாடசாலை மாணவர்களுக்கு இலவசச் சீருடை அறிமுகப்படுத்தப்பட்டது ————
22. யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது ————
23. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது ————
24. நடைமுறையிலுள்ள அரசியல்யாப்பு எழுதப்பட்டது ————
25. இலங்கை முடிக்குரிய நாடானது ————

★ 26 30 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடையுள் சரியானதைத் தெரிவு செய்க .

25. இருதய நோயை கண்டறிய இருதயத்தை உற்றுப்பார்க்கப் பயன் படுத்தும் கருவி
1) அல்ட்ர-7 2) வோல்ற்ரா-2
3) அடல்ப்ற் 4) ஸ்பிக்மனோ மீற்றர்

27. முதன் முதல் செயற்கை மழை பெய்த இடம்
1) ஐக்கியஇராச்சியம் 2) அவுஸ்திரேலியா
3) ஜப்பான் 4) இந்தியா

28. கறுவாப் பட்டையில் உள்ள இரசாயனப் பொருள்
1) நிக்கொட்டின் 2) தயனின்
3) குவானின் 4) சிதமெல்பிஹைன்

29. அபின் போதைப் பொருள் எடுக்கும் மரம்?
1) பொபிமரம் 2) கஞ்சாசெடி
3) குறுக்ஸ்மரம் 4) பின்னிக்ஸ்மரம்

30. உலகில் உள்ள மிகப் பெரிய மலர் எது?
1) தாமரை 2) கறுப்புவெள்ளைப்பூ
3) ரப்லேசியா மலர் 4) சிம்பு மலர்

# இராணுவக் கைதிகளை யாழ். சிறைச்சாலைக்கு மாற்ற முயற்சி

(யாழ்ப்பாணம்)
மிருசுவில் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவக் கைதிகளை மீளவும் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைப்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ் சிவபாதசுந்தரம்,சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் ஆகியோர் இது குறித்து கடந்த திங்களன்று கூடி ஆராய்ந்ததுடன், நீதிச்சேவை ஆணைக்குழுவின் பதிலை எதிர்பார்த்துள்ளதாய் அறிய முடிகிறது.

மேற்படி இராணுவக்கைதிகள் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் கடந்த பெப்ரவரி மாதம்,அங்கிருந்த தமிழ்க் கைதிகளுடன் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து பலாலி இராணுவப் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

# மாவனல்ல நகரில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
மாவனல்ல நகரில் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை நீக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியின் அமைதி நிலையை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேலதிக சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (உ-7)

# அபிவிருத்தி தொண்டர்க்கு நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)
இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரனால் வழங்கப்படவுள்ளது.

தொழிற்பயிற்சிகள் நடைபெறும் நிலையங்கள் கட்டுமாணதொழில்நுட்பப் பயிற்சி மரத்தொழில் நுட்பப் பயிற்சி என்பன சுன்னாகம் தச்சுவேலை நிலையத்திலும்.

பனைவளத் தொழில்நுட்பம் உணவுத் தொழில்நுட்பம், இயந்திரத் தொழில்நுட்பம் ஆகிய பயிற்சிகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் உள்ள நிலையத்திலும் நடைபெறவுள்ளதாகவும் மேற்படி ஐந்து தொழிற்பயிற்சித்துறைகளுக்கும் தலா 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதேசெயலகதிட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன் தெரிவித்துள்ளார் (உ-2)

## பௌர்ணமிதினபூஜை

சுன்னாகம்மயிலணிஸ்ரீசர்வமங்கள இராஜேஸ்வரி அம்பாள் கோயிலில் பௌர்ணமி தினப் பூசைகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். (உ)

★ பின்வரும் புகழ் பெற்றவர்கள் பிறந்த இடத்தினைத் தருக.

31. அரிஸ்ரோட்டில் ————
32. கலிலியோ கலிலி ————
33. அன்னை தெரேசா ————
34. கிளியோபாட்ரா ————
35. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் ————

★ இலங்கையிலுள்ள பின்வரும் நகரங்களுக்கு தற்போது வழங்கப்படும் புதிய பெயர் என்ன?

36. கொலன் தோட்ட ————
37. செங்கட கலை ————
38. காஜரகம ————
39. கோகன்ன ————
40. மாதோட்ட ————

## அறிவியல் பகுதி வினா இல-55

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர். ....................
சொந்த முகவரி: ....................
கற்கும் பாடசாலை . ....................
மாணவர் கையொப்பம் . ....................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :-
விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 10-05-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை மேற்கு சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் எதிர் வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அதன் தலைவர் வை. குணாளன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

# அறிவியல் வினா இல-54 விடைகள்

1) பாராட்டு
2) ROM
3) முகில்
4) 12
5) &
6) கரும்பலகை
7) வெள்ளி
8) லிங்கன்
9) சரம்
10) Peoud
11) வயோதிபன்
12) சத்தம்
13) ஆடி
14) மும்தாஜ்
15) 99
16) 30
17) 1100
18) 514
19) 13/4
20) 17/10
21) ஜகார்த்தா
22) ஹவானா
23) மாலே
24) பாங்கொக்
25) வெலிங்டன்
26) ஏப்ரல் 23
27) சிறாம்பூச்சி
28) பியர்ஷ் பெடி
29) 1932
30) 1893
31) யுவான், பெண்
32) பிராங், சென்றிமோஸ்
33) லீரா, சென்ரெசெமி
34) றியால் டினார்ஸ்
35) குறோன், ஓர்
36) 1960
37) 1796
38) தாதுசேனன்
39) Deoxyribose Nuclie Acid
40) Virus

# அறிவியல் வினா-54

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் பெயர் விபரம்

★ அ. அகிலன்
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
★ தமிழ்ச் செல்வி.விசுவகேது
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
★ சிவகுமாரன் சயந்தன்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
★ செ. ஜெரீம் நிரோஷன்
வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
★ ஆர். கார்த்திக்
ஹாட்லிக் கல்லூரி
★ தங்கராசா தரணிதரன்
வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
★ த. கிருஷாந்தி
யா/சாதனா பாடசாலை
★ மருதப்பு ரஞ்சினி
நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி
★ எ. அன்பரசி
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
★ ரீ. அனோல்ட்
புனித பத்திரிசியார் கல்லூரி
★ எஸ். நிரோஜிகன்,
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம்
★ எம். மதுமிதா
வேம்படி மகளிர் கல்லூரி
★ ரீ. கௌசி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
★ தாட்சாயினி தர்மகுலசிங்கம்
நவாலிவீதிஆனைக்கோட்டை
★ லதாவதி கந்தையா
'கற்பகதரு' மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை

## இன்று ஒரு தகவல்

# இருவாரம் இருபது வரம்

ஒரு துறவியிடம் வந்த சிறுவன் ஒருவன் ''எல்லாருடைய விருப்பத்தையும் கடவுளால் நிறைவேற்ற முடியாது போலத் தெரிகிறதே?'' என்றான். எதனால் அப்படிச் சொல்கிறாய் என்று கேட்டார் துறவி. ''விறகுவெட்டி குளிர் அடிக்க வேண்டும்என்று வேண்டுகிறான்'' என்றான் அவன். ''ஆமாம்! அப்போது தான் அவன் குளிர்காலத்தில் நிறைய விறகுகளை விற்க முடியும். அதனால் அப்படி வேண்டுகிறான்'' என்றார் துறவி. '' ஆனால் பழவியாபாரி மழையும் இருக்கக் கூடாது, வெய்யிலும் காயக் கூடாது'' என்று வேண்டுகிறான். ''ஆமாம் அப்படி இருந்தால்தான் பழங்கள் கெடாமல் நீண்ட நாட்களுக்கு இருக்கும்.'' ''உழவனோ மழை பெய்ய வேண்டும் என்று வேண்டுகிறான் ஆனால், செங்கல் சூளை போடுகிறவன் மழைவரக் கூடாது என்று வேண்டுகிறான். அதனால், கடவுளே நினைத்தால் கூட எல்லோருடைய வேண்டுதலையும் நிறைவேற்ற முடியாது என்று தெளிவாகிறதே'' என்றான் அவன்.

''அது சரி! இப்பொழுது வானிலை எப்படியுள்ளது?'' என்று கேட்டார் துறவி. வெம்மையாக உள்ளது'' சென்றவாரம் எப்படி இருந்தது?'' ''திங்கள், செவ்வாயில் மழை பெய்தது. வெள்ளிக் கிழமையன்று குளிராக இருந்தது'' என்றான் சிறுவன் '' பார்த்தாயா! இந்த இரண்டு வாரத்துக்குள்ளேயே கடவுள் எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றியுள்ளார்'' என்றார் துறவி.

பேராசிரியர் எ. சோதி

# "மெறிற் பென்சன் விருது" மட்டு.பத்திரிகையாளருக்கு

பத்திரிகையாளர் சங்கத்தின் இவ்வாண்டிற்கான ''மெறிற் பென்சன் விருது'' மட்டக்களப்புப் பத்திரிகையாளர் ஜி.நடேசனுக்கு வழங்கப்படவிருக்கிறது.

வீரகேசரி, ஐ.பி.சி, போன்ற செய்தியூடகங்களுக்கு செய்தியாளராக ஜி. நடேசன் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

எதிர் வரும் 15 ஆம் திகதி கல்கிசை விடுதியில் நடைபெறும் பத்திரிகையாளர் வைபவத்தில் இவ் விருது வழங்கப்படவிருக்கிறது.(து)

# மலசல கூடக் குழிக்குள் இறங்கிய மூவர் மரணம்

(கொழும்பு)

மலசல கூடக் குழிக்குள் இறங்கிய மூவர் மரணமாகிய சம்பவம் கொழும்பு நுகேகொடையில் இடம் பெற்றுள்ளது.

புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு மாடி வீடு ஒன்றின் பாவிக்கப்படாத மலசல கூட குழியிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

புதிதாக கட்டப்பட்ட மலசல கூடக்குழியினுள் கொங்கிறீட்டை தாங்கிப் பிடிக்க பாவிக்கப்பட்ட சாட்டரிங்கை சழற்றி வெளியில் எடுப்பதற்காக இறங்கிய போதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (செ)

# காணாமற் போனோர் தொடர்பான விசாரணை அழைக்கப்பட்டோர்விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் புலனாய்வுப் பிரிவினர், பின்வருவோர் பற்றிய விசாரணைகளுக்காக அவர்களது உறவினர்கள் மற்றும் சாட்சியங்களை அழைத்துள்ளனர்.

### யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம்

வீரமுத்துமுத்துலிங்கம் 42, துண்டி வீதி கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.

ரத்தினம் தவராசா கைதடி சாவகச்சேரி.

வீரசிங்கம் ஜெகராசா உரும்பிராய் மேற்கு கோப்பாய்.

எ. அன்ரன் யூலியஸ் 61/3 மவுண்காமல் வீதி யாழ்ப்பாணம்.

தர்மலிங்கம் கருணாகரன் நாவற்குழி தெற்கு கைதடி.

### பருத்தித்துறை பொலிஸ் நிலையம்

சித்தம்பிள்ளை சுதர்சன் மட்டுவில் வடக்கு மட்டுவில்.

கணபதி சசிகரன் அல்வாய் வடக்கு கொடிகாமம்.

ஞானப்பிரகாசம் கிறிஸ்ரி ரஞ்சன் தும்பளைபருத்தித்துறை.

நவரட்ணம் யோகேஸ்வரன் கரவெட்டி தெற்கு வடமராட்சி.

குமாரரத்தினம் ரத்தினகுமார். ஆதி கோவிலடி பருத்தித்துறை.

முருகன் சுந்தரலிங்கம் வண்ணாங்கேணி பளை.

தில்லையம்பிள்ளை ரங்கநாதன் வாடி வீதி பருத்தித்துறை.

வீரநேசி கதிரவேலு கரவெட்டி மத்தி கரவெட்டி.

பசுபதி தவராசா கம்பர் மலை வல்வெட்டித்துறை.

கேமா செல்லம்மா புத்தூர் கிழக்கு புத்தூர்.

### சுன்னாகம் பொலிஸ் நிலையம்

ஆறுமுகம் சரவணபவானந்தன் காந்தியூர் புலோலி வடக்கு புலோலி.

ஜெயசுதன் ஸ்ரான் ஜீவா நாவற்குழி தச்சன்தோப்பு.

அருந்தவராசா செல்வரத்தினம் அராலி கிழக்கு அராலி.

தம்பிராசா சந்திரமோகன் பிளந்வீதி சுன்னாகம்.

சின்னத்தம்பி செல்வராஜன் ஏழாலை மேற்கு சுன்னாகம்.

கணபதிப்பிள்ளை கேதீசன் மே/பா, நடேசபிள்ளை இணுவில் கிழக்கு.

சிவனேஸ்வரி விஸ்வலிங்கம் சுழிபுரம் மத்தி.

சுப்பிரமணியம் கமலேஸ்வரன் கட்டுப்புலம் சுழிபுரம் யாழ்ப்பாணம்.

சின்னராசா உதயகுமார் சங்குவேலி வடக்கு சுன்னாகம். (உ-10)

## இளம் சமுதாயத்தை

# அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் மினி திரை அரங்குகளை மூடிவிடவும்

## அரச அதிபருக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

மினி சினிமா திரையரங்குகளில் சமூகத்தைச் சீரழிக்கும் வகையிலான திரைப்படங்கள் காண்பிக்கப்படுவது குறித்தும், அதனைத் தடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் பிரிவு யா-மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அக் கடிதத்தில்,

யாழ் மாவட்டத்தில் பல இடங்களில் நகரம் உட்பட மினி சினிமா எனும் போர்வையில் எமது இளம் சமுதாயத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் ஆபாசப் படங்கள் காண்பிக்கப்படுகிறது.

இப் படியான படங்களைக் காண்பிப்பதற்கு துணை போகும் நகர பிரதேச சபையினர் சட்டத்துக்கு முரணான விதத்தில் பண வருமானத்திற்காக அனுமதியளித்ததைஉடன் நிறுத்தி எமது இளம் சமுதாயத்தை சரியான வழியில் வழி நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் உதவி உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ)

# திருட்டுக்கள் அதிகரிப்பு

(இணுவில்)

கந்தரோடைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன.

கடந்த சில தினங்களின் முன் ஒரே இரவில் மூன்று வீடுகளுள் புகுந்த திருட்டுக் கும்பல், பல்லாயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களைக் களவாடிச் சென்றுள்ளனர். [உ-49]

# நியமனக் கடிதம் வழங்கல்

(வடமராட்சி)

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தில் இருந்து, அபிவிருத்தி தொண்டர்களுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, நியமனக்கடிதங்கள இன்றுமு.ப. 10.00 மணிக்கு இணுவிலில் இயங்கும் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என தென்மராட்சிப் பிரதேச செயலகர் பு. சுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார். (உ-23)

# மாணவர் விபரங்களை தருக

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் நலன்புரி நிலையங்களில் வசித்துவரும் மாணவர்கள சம்பந்தமான விபரங்களுடன் உடனடியாகத் தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களை வலயக்கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுள்ளார். (உ-2)

# நியமனக் கடிதங்கள்

## வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் உள்ள எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்ற 34 பேருக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

குடாநாட்டில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பிரதேச செயலகங்கள், கடற்றொழில் திணைக்களம், பதிவாளர் அலுவலகம், தேர்தல் அலுவலகம்ஆகியவற்றில்நியமனம்பெற்றுள்ள எழுது வினைஞர்கள் கடமையாற்றவுள்ளனர். [உ]

## தென் இந்திய

# திருச்சபையினரால் இலவசப்பாடபோதனை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில், தென் இந்தியத் திருச்சபையினரால் வசதி குறைந்த மாணவர்களிற்கு இலவச மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதைவிட குடத்தனைப் பகுதியில் இச்சபையால் முன் பள்ளி பா ர்பாடசாலை ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிற்கு போசாகு உணவும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [உ-43]

# யாழ்.சிறைச்சாலையில் ஊழியர் பற்றாக்குறை

[யாழ்ப்பாணம்]

யாழ்.சிறைச்சாலையில் ஊழியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருவதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த இரு மாதங்களின் முன் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட போதிலும், நியமனம்வழங்கப்படவில்லை. கைதிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனாலேயே இந் நிலை எழுந்துள்ளது.

இதன் காரணமாக, கைதிகளை நீதி மன்றம் அழைத்துச் செல்வதிலும் தாமதம் எதிர் நோக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. [உ-6]

## வலிகாமம் வலய

# தொண்டராசிரியர்கள் நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கான நேர்முகத்தேர்வுகள வலயப் பணிமனையில் நடைபெற்று வருகின்றன,

கோட்ட ரீதியாக நேர்முகத் தேர்வு நடைபெறும் தினங்கள் வருமாறு:-உடுவில் கோட்டம் 3 ஆம் திகதி முற்பகலும் தெல்லிப்பழைக் கோட்டம் 3 ஆம் திகதி பிற்பகலும் சண்டிலிப்பாய்க் கோட்டம் 4 ஆம் திகதி முற்பகலும் சங்கானைக் கோட்டம் 5 ஆம் திகதி முற்பகலும் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

தொண்டராசிரியர்கள் குறிப்பிட்ட ஆவணங்களுடன் தத்தமது அதிபர்களுடன் சமூகமளிக்குமபடி மேலும் அவர் தெரிவித்துள்ளார். (உ-2)

# தடகள விளையாட்டு விழா ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுவிழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிகிழக்குபிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்), பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்ஏ.டபிள்யூ அரியநாயகம், வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

100 மீற்றர், 200மீற்றர், 400மீற்றா, 800மீற்றா ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இறுதி ஓட்டப் போட்டிகள், வினோத உடைப் போட்டி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அஞ்சல் இறுதிப் போட்டிகள ஆகியன உட்பட பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக வலி கிழக்கு பிரதேச சபையின் விளையாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (உ)ள்

# வாடகை வீட்டு வை. கோ. கோடீஸ்வரர் ஆனது எங்ஙனம்?

## முரசொலி பத்திரிகை வினா

(சென்னை)

சென்னையில் எண்ணூறு ரூபா வாடகை வீட்டிலிருந்த வை கோபாலசாமி எப்படி கோடி ரூபா பெறுமதியான வீட்டிற்கு அதிபதியானார் என்று முரசொலிப்பத்திரிகை கேள்வி எழுப்பியிருக்கிறது;

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலர் வை கோபாலசாமி, கலைஞர் மு. கருணாநிதி ஊழல் வழிகளில் சொத்துச் சேர்த்தார் என்று குற்றஞ் சாட்டியதையடுத்தே தி.மு.க. பத்திரிகையான முரசொலி வை. கோபாலசாமி எப்படி அண்ணா நகரில் கோடி ரூபா பெறுமதிக்கு மேல் வீடு கட்டினார் என்று கேள்வி எழும்பியுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் வை. கோபாலசாமி வீட்டு விடயம் தவிர ஆறு கேள்விகளும் தொடுக்கப் பட்டிருக்கிறது.

தேர்தல் அண்மித்து வரும் இவ் வேளையில், இருகட்சிகளும் ஒன்றையொன்று ஊழல் சம்பந்தமாகக் குற்றம் சாட்டுவதை மக்கள் வெறுப்பதாக அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர். (து)

# உலகைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில்லை

## அமெரிக்கா உறுதி

(வாஷிங்டன்)

ஒட்டு மொத்தமாக உலகத்தைப் பாதிக்கும் எந்தவிடயத்திலும் அமெரிக்கா தன்னிச்சையாக முடிவெடுக்க மாட்டாது என அமெரிக்க அதிபர் புஷ் உறுதி அளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் மற்றும் ரஷ்ய அதிபர் புட்டின் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அமெரிக்க அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலகைப் பாதிக்கக் கூடிய அணுவாயுதக்கையிருப்பைக் குறைப்பதற்கு இரு நாடுகளுமே பரஸ்பர ஒப்புதல் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது. (உ-9)

## பேருந்து

# ஆற்றில் பாய்ந்ததில் 24 பேர் பலியாகினர்

(புதுடில்லி)

உத்தராஞ்சல் பிரதேசத்தில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று அலத்மங்கா ஆற்றில் பாய்ந்ததில் அதில் சென்ற அனைவரும் பலியாகியதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பயணித்த 24பேரில் 4பேரினது சடலங்கள் மீட்கப்பட்டதுடன் மற்றைய சடலங்களை மீட்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (து)

## ஆசிய - ஆபிரிக்க

# விளையாட்டுப் போட்டி புதுடில்லியில் இடம்பெறும்

(புதுடில்லி)

ஆசிய ஆபிரிக்க விளையாட்டுப் போட்டிகள் புதுடில்லியில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளன.

இத் தகவலை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் உமாபாரதி இது தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

புதுடில்லியில் போட்டியை நடத்துவதற்குரிய அடிப்படை வசதிகள் பூர்த்தியாக்கப்பட்டு விடுமென்று தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் விசேடமாகக் கலந்து கொண்ட துணை நிலை ஆளுநரும், மாநில முதலமைச்சரும், ஆசிய ஆபிரிக்க விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாக அறிவித்துள்ளனர். (து)

## இந்திய தலைவருடன்

# பேச்சு நடாத்த சமாதானக் குழு விரைவு

(புதுடில்லி)

'காஷ்மீர மண்டேலா' சமாதானப் பேச்சுக்கு ஒரு குழுவை அனுப்ப இருக்கிறார்.

இந்திய சிறையில் நீண்ட நாள் கழித்த முஸ்லிம் தீவிர வாதக்குழுத் தலைவரான காஷ்மீர் மண்டேலாவே குழுவை இந்திய தலைவர் பந்துடன் பேச்சுவார்த்தைக்கு அனுப்பஇருக்கிறார்.

பந்த பேச்சுவார்த்தைக்கு வருமாறுபலதீவிரவாதக் குழுக்களுக்குஅழைப்புவிடுத்துள்ளதையடுத்துகாஷ்மீர் பிரச்சினைதொடர்பாக பந்துடன் பல தீவிர வாதக்குழுக்கள் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (து)

## நாதஸ்வர மேதை

# நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் காலமானார்

[சென்னை]

பிரபல நாதஸ்வர இசை மேதை நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார்.

பழைய இராகங்களுடன் புதிய உத்திகளையும் கலந்து துல்லியமாக வாசிக்கக் கூடியவர் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்.

இவர் உலகறிந்த நாதஸ்வர மேதை கலைஞர்களை மதிப்பவர். தியாகப்பிரம்மரின்கீர்த்தனைகளை இலாவகமாக வாசிப்பவர், தியாகராசர் உற்சவ காலங்களில் வாசிப்பவர், தியாகராசா சபையிலும் தொண்டாற்றியவர் என்று டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா இரங்கலுரையில் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலுள்ள பல தரப்பட்ட கலைஞர்களும் நாமகிரி பேட்டை கிருஷ்ணனின் மறைவு குறித்துஇரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர். (து)

## உலக தரிசனம்

# பேச்சு மூலம் சமாதானம்

[லண்டன்]

ஸியாரா லியோனில் 10 வருட கால வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அந் நாட்டு அரசும் தீவிரவாதிகளும் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

பலத்த வெற்றி கிடைக்கும் என எதிர் பார்க்கும் இப் பேச்சு வார்த்தைக்கு ஐ நா சபை பெரிதும ஒத்துழைப்பது குறிப்பிடத்தக்கது. [உ-7]

# காஷ்மீரில் மோதல்

(ஸ்ரீநகர்)

காஷ் மீராபபகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றின் போது மூன்று அயல் நாட்டுத் தீவிர வாதிகளை இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மேற்படி சம்பவத்தில் இந்தியப் படையினர் தரப்பில் சேதமெதுவும் ஏற்பட வில்லையென அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-9)

# சீனா கண்டனம்

(பீஜிங்)

ஏவுகணை எதிர்ப்புப் பாதுகாப்பு முறை ஒன்றை அமெரிக்கா உருவாக்கி இருப்பது ஒரு புதிய ஆயுதப் போட்டிக்கு மட்டுமின்றி உலகளாவிய பதற்றத்தையும் உருவாக்கும் என சீனா, அமெரிக்க அரசை எச்சரித்துள்ளது.

ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கையை அகற்றுவது மற்றும் ஏவுகணை எதிர்ப்புப் பாதுகாப்பு முறை ஒன்றை உருவாக்குவது கண்டிக்கத் தக்கது என சீனா மேலும் தெரிவித்துள்ளது. (உ-9)

# உலக நாடுகளில் ஆயுதப் போட்டி

(வாஷிங்டன்)

உலக நாடுகள் மத்தியில் புதிதாக ஆயுதப் போட்டி ஒன்று ஏறபட வாய்ப்புள்ளதாக ஐரோப்பிய யூனியனின் தலைவர் ஸ்டிபல் எச்சரித்துள்ளார்.

அதனால் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தினை கைவிடுமாறு அமெரிக்க அதிபர் புஷ்சை தான் வற்புறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-9)

# அணு ஆயுதப் போர்ப்பயிற்சி இராஜஸ்தானில் ஆரம்பம்

(புதுடில்லி)

முதலாவது அணுவாயுதப் போர்ப் பயிற்சியை இந்தியா நேற்று முன்தினம்இராஜஸ்தானில்தொடங்கியுள்ளது.

பூரண விஜயம் என்று பெயரிடப்பட்ட அணுவாயுதப் படைப்பயிற்சியில் ஐம்பதினாயிரம் படை வீரர்கள் பங்கு கொள்கின்றனர்.

இந்தப் பயிற்சியில் நூற்றுக்கு மேற்பட்ட நவீனரக விமானங்கள் உட்பட இராணுவ விமானங்கள் ஈடுபட்டு வருகின்றன.

அணுவாயுதப்பாவனை முறைகளும் அணுவாயுததாக்குதலிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்ளலாம் போன்ற தற்காப்பு பயிற்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (து)

# ஆயுத தயாரிப்புக்கு அமெரிக்கா நிதியுதவி

(வாஷிங்டன்)

'ஸ்மாட்'ரக துப்பாக்கிகள் தயாரிக்க பொஸ்ரன் நாட்டிற்கு அமெரிக்கா நிதியுதவி வழங்கியுள்ளது.

பொஸ்ரன் நாட்டின் ஸ்மித் நகரின் துப்பாக்கி தொழிற்சாலைக்கு உயர் ரக துப்பாக்கியான 'ஸ்மாட்' தயாரிக்க 1.8 மில்லியன் அமெரிக்க டொலரை அமெரிக்கா வழங்கியுள்ளது.

உலகிலே சிறந்த துப்பாக்கி தயாரிப்பில் பொஸ்ரன் நாடு பேர் போனதும் குறிப் பிடத்தக்கது; (து)

# இந்தியாவின் அழைப்புக்கு பங்களாதேஷ் வரவேற்பு

[டாக்கா]

பேச்சு வார்த்தைக்காக பங்களாதேஷ் அரசிற்கு இந்தியா விடுத்த அழைப்பினை அந் நாட்டரசு வரவேற்றுள்ளது.

எனினும், பேச்சு வார்த்தைக்கு வருவது தொடர்பாக முடிவெடுக்க வில்லையெனவும் இந்தியாவின் அழைப்பிற்குத் தாம் சாதகமான பதில் ஒன்றை விரைவில் வழங்கவுள்ளோம் என்றும் பங்களாதேஷ் அரசில் பேச வல்ல அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் பங்களாதேஷ் சார்பாக பங்கு பற்றும் பிரதி நிதிகள் குழு அமைக்கும் முயற்சியில் தற்போது பங்களாதேஷ் அரசு ஈடுபட்டுள்ளதென ஊர்ஜிதப்படுத்தப் பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

# பலஸ்தீனர்கள் மீது கடும் நடவடிக்கை

## ஏரியல் ஷரோன் எச்சரிக்கை

(ஜெருசலேம்)

பலஸ்தீனர்களின்வன்முறைகள் மற்றும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கை ஒன்றை எடுக்கப் போவதாக இஸ்ரேல் பிரதம மந்திரி ஏரியல் ஷரோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட பகுதியில் உள்ள யூதக் குடியிருப்பில் நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய போதே ஷரோன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (உ-9)

# மனித இறைச்சியை விற்ற இருவர் கைது

[லண்டன்]

மாட்டிறைச்சி என்று கூறிக் கொண்டு மனித இறைச்சி விற்ற இருவரை அண்மையில் கெஸினோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர்கள் இருவரும் கெஸினோ இராஜ்யத்தின் தலைநகர் மேர்ல்டோவாவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் புற்றுநோய்க்கிலக்காகி அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்ட ஒரு மனிதனின் சரீரத் துண்டங்களையே வைத்தியசாலை குப்பைத் தொட்டியில் இருந்து திருடிச் சென்று வாடிக்கையாளர்களுக்கு விற்க முயன்ற சமயம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, மனித மாமிசம் புசித்து வந்த இவர்களின் வாடிக்கையாளர்கள் இவர்களின் கைதை கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-9]

# பார்சல் குண்டு வெடித்து வைத்தியர் படுகாயம்

(கட்டார்)

சவுதி அரேபியாவில் குண்டு வெடித்ததில் அமெரிக்க வைத்தியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்த வைத்தியர் தனது வாக்கு மூலத்தில் தன்னுடைய முகவரியில், தனக்கு ஒருபார்சல் வந்ததாகவும்அதனைஒருவீடியோஒளிப்படநாடா என்று நினைத்து பிரித்த வேளை அது வெடித்ததாகவும் கூறினார்.

முகத்தில் படுகாயமடைந்த வைத்தியரின் கண்களிற்கு சிலவேளை ஆபத்து வரக் கூடும் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்தமாதம் ரியாத்தில் இதேபோன்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றதில்பிரிட்டிஷ் பிரமுகர் ஒருவர் காயமடைந்தார்;

இந்த இரு குண்டு வெடிப்புக்களுக்கும் சம்பந்தம் இருக்கல்லாம் என் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்; (உ-7)

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல் மன்னவாம் மன்னர்க் கொளி

- குறள்

# வலம்புரி

## உரிமை காக்க!

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க பெரும்பான்மை இனம் தவறியதன் விளைவையே இன்றுநாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

குட்டக் குட்டக் குனிவதும், குனியக் குனியக் குட்டுவதும் அவ்வளவு ஆரோக்கியமான செயலன்று. ஓர் இனம் தொடர்ச்சியாக அடக்கப்பட்டு - ஒடுக்கப்பட்டு- அடிமைப்படுத்தப்படுமாயின் என்றோ ஒரு நாள் அடக்கப்பட்ட மக்கள் பொங்கி எழுவது காலம் இட்ட கட்டளை. இதனையே 'கோளையும் வீரனாவான் தன் உடைமைகள் பறிபோகும் போது' என அறிஞர்கள் காரணம் கூறியுள்ளனர்.

எனவே ஒரு நாடு தனது இறைமையை, சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பெரும்பான்மையிடமே இருக்கிறதென்ற உணர்வை அடியோடு அப்புறப்படுத்த வேண்டும். அதே நேரம் சகல இனமும்சமத்துவமாக வாழும் உரிமைக்கு வழிகோல வேண்டும்.

இல்லையேல் சிறுபான்மையின் ஆட்சியில்பெரும்பான்மையினம் அடிமையாகும் கட்டம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இலங்கையில் சிறுபான்மையினமான முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் உரிமைக்கு சிங்கள மக்களும், தமிழ் மக்களும் கூட்டாகப்பொறுப்புவகிக்கவேண்டியது அவசியமாகும்.

முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரை அவர்களின் உரிமைகளுக்கு, சுதந்திரத்திற்குதற்போது அச்சுறுத்தல் தோன்றியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகள் பேரினவாதத்தால் பறிக்கப்பட்டபோது பெரும்பான்மை இனம் சார்ந்த புத்தி ஜீவிகளின் மௌனமே இன்று பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்பிற்குக் காரணமாகியது. உரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தினர்.


இன்று தீர்க்க முடியாத நிலையில் நிலைமை கட்டு மீறிப் போய் விட்டது.

இவ்வாறு பெரியதொரு பட்டறிவைப் பெற்ற பெரும்பான்மையினர் முஸ்லிம்மக்களுடன் நாட்டாண்மை காட்ட வெளிக்கிட்டால் நீண்ட காலத்தில் முஸ்லிம் தீவிரவாதிகளுடன் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைநடத்தவேண்டி ஏற்படும்.

---

வெள்ளி நற்சிந்தனை

# ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் வந்துதித்த யோகர்சுவாமிகள் சிறந்த ஒரு சிவதொண்டன்



'சிவபூமி' என்று திருமந்திரத்தில் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டில் தோன்றிய புகழ்மிக்க மகாஞானி யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள்.

### சிவதொண்டன்

காவிஉடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல் துறவு பூண்ட முனி புங்கவராகிய யோகர் சுவாமிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஞானதீபமாகத் திகழ்ந்தார். அவரது உளத்தூய்மையாலும், செயற்பணிகளாலும் சிவனடியாராக வாழ்ந்து ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகோலினார். பல்லாயிரக்கணக்கானோர் சுவாமிகளைத் தமது ஞானக் குருவாகஏற்றுக்கொண்டமைக்கு அவரது இதயசுத்தியும் அங்கு ஒளிவிட்டுப் பிரகாசித்தஞான சொரூபமுமேகாரணமாகும்.

சுவாமிகள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும் மட்டக்களப்பு செங்கலடியிலும் சிவ தொண்டன் நிலையங்களை அமைத்துச் சமயப் பணிபுரிந்து வந்தார். சிவ தொண்டன் என்னும் சமய சஞ்சிகையைஆரம்பித்துவைத்தார்.

### சதாசிவன்

மாவிட்டபுரத்திலே அம்பலவானர் சின்னாச்சி தம்பதிகட்கு 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் நாள் பிறந்த இவருக்கு சதாசிவன் என்று பெயரிட்டனர். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த சதாசிவன் தனது மாமியார் ஒருவருடன் வாழ்ந்துவந்தார். உரிய காலத்தில் தமிழ்ப்பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கினார். பின்னர் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றார். அரசசேவையில் கிளிநொச்சி நீர்ப்பாசன அலுவலகத்தில் பொருள் காப்பாளராகக் கடமைபுரிந்து வந்தார். அக்காலத்தில் திருமுறைகளையும், புராணங்களையும் ஓல் உணர்ந்து ஆன்மீகத்திநாட்டம் கொண்டார். நல்லூர்க் கந்தன் ஆலயத் தேரடியில் செல்லப்பசுவாமிகள் யோகரைக் கண்டதும் ஆரடாநீ?'' 'தேரடாவுள்' தீரடாபற்று' என்ற மணி வாக்குகளைத் திருவாய் மலர்ந்தார். இந்த வார்த்தைகள் சதாசிவனின் வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட்டன. தன்னை மறந்தார். குருதேவரின் இன்னமுதாம் ஞான அமுதை உண்டு 'யோகர்' ஆனார்.

### நல்லூரான் திருவடி

செல்லப்பா சுவாமிகள் தன்னை ஆட்கொண்ட சிறப்பை. 'என்னை எனக்கறிவித்தான் எங்கள்குருநாதன். இணையடியேன் தலைவைத்தான் எங்கள் குருநாதன். அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன். அவனியெலாம் ஆளவைத்தான் எங்கள் குரு நாதன்'? என்று நற்சிந்தனைப்பாடலில் குறிப்பிடுகிறார்.

'நல்லூரான் திருவடியை நான் நினைந்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே இரவு பகல் காணேனடி' என்றுபாடி நல்லூரானின் பெருமையை நாம் அனைவரும் அறியவும் உணரவும்வைத்த பெருமை யோகர் சுவாமிகளுக்கே உண்டு.

எத்தனை துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் நல்லைக் கந்தனின் திருவருள் நம்மை எல்லாம் காப்பாற்றும் என்பதனை; 'பஞ்சம்படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி' என்ற யோகர்சுவாமிகளின் பாடல் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

### பேதமற்ற பார்வை

பிறப்பு இறப்பற்று எல்லாம் கடந்த ஒன்றான நிலையில் எந்தப்பாகுபாடும் கிடையாதென்பதை 'சாதி சமயம்மில்லான் எங்கள் குருநாதன். தான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்' வேதாந்தம் சித்தாந்தம் வேறாகக் காணோம்'. 'அவரவர்க்கு அதுவதுவாயிருக்கின்ற தெய்வம்' என்று சொல்லி எல்லாம் ஒன்றே என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

### நற்சிந்தனை

சுவாமிகள் ஒரு நடமாடும் தெய்வமாக விளங்கி அருட் சித்துக்கள் பல செய்து பக்தி வழியை விளக்கி முத்தி நெறி காட்டினார்.

சுவாமிகளின் திவ்விய மகா வாக்கியங்களாகிய ஒரு பொல்லாப்புமில்லை' 'எப்பவோ முடிந்த காரியம்' 'முழுவதும் உண்மை' 'அது அப்படித்தான்' 'யாமறியோம்' 'சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை' 'காயமொரு சித்திரக் கோயில்' என்பன என்றென்றும் பெரிய வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கும் பொய்யாமொழிகளாகும்.

உயர்ந்த அற்புதநிலை எய்திய சுவாமிகளின் மகிமை அறிந்து போற்றுதல் எமது கடமையாகும்.

சமூக ஜோதி

**கா. கணேசதாசன்**

---

# இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட 'பாபர்' இந்தியாவில் மொகலாய ஆட்சியை நிறுவியவர்

துருக்கிஸ்தானத்தின் ஒரு சிறு நாடான பெர்கானாவின் இளவரசர்பாபர்இவர் 1483ல் பிறந்தவர். அவரது தந்தை இறந்த போது அவர் வயது பதினொன்று. அந்த வயதில் அவர் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அவரது தந்தைமூர்வம்சத்தையும், தாய் செங்கிஸ் ஜான் வம்சத்தையும் சேர்ந்தவர்கள். தன்முன்னோரான மூருக்குச் சொந்தமாகஇருந்த சமர்கண்டு நகரைப் பிடிக்க விரும்பிய பாபர் அதன் மீது படை எடுத்துச் சென்றார்; அப்போது சமர்கண்டு சுல்தான் போருக்குத் தயாராக இல்லாததால் பாபரை எதிர்க்க முடியவில்லை.

### இந்தியாவை நோக்கி

சமர்கண்டைப் பாபர் பிடித்த போது, தன்நாட்டை எதிரிகள் கைப்பற்றி விட்டார்கள் என்ற செய்தி பாபருக்குக் கிடைத்தது. ஆனால் அங்கே அவர்செல்லமுடியாது போகவே, காபூலுக்குத் திரும்பி வந்து அவர் முகாம் போட்டார். காபூலில்இருந்த பாபர் இந்தியாவைக் கைப்பற்றவிரும்பினார். அப்போது டில்லி சுல்தான் பலம் இழந்து இருந்தான் அவனது அதிகாரிகள் மக்களைவாட்டிவதைத்தார்கள். அவனது இரு உறவினர்களான ஆலம் கானும், தௌலத்கானும் அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டி போட்டனர்.

அவர்கள் இருவரும்பாபரை இந்தியாவின் மீது படை எடுத்து வரும்படி வேண்டினார்கள். பாபரும் உற்சாகத்தோடு கிளம்பி வந்துபஞ்சாப்பில் உள்ள லாகூரைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு டில்லியை நோக்கி முன்னேறினார். டில்லி சுல்தான் இப்ராகீம் லோடி அப்போது அவசர அவசரமாகத் தன்படை வீரர்களைத்திரட்டிப்போருக்குத் தயாரானான். இருபடைகளும் பானிப்பட்டு என்ற இடத்தில் போர் புரிந்தன. பாபரின்படைவீரர்கள் பன்னிரெண்டாயிரம் பேர்களே; ஆனால் அவர்கள் போரிடப் பயிற்சி பெற்றவர்கள், பாபரிடம் விசுவாசம் பூண்டவர்கள் லோடியின் படையில் இலட்சம் வீரர்களுக்கு மேல் இருந்தும் அவர்களுக்குத் தலைமை தாங்கி கட்டுப்பாடுடன்நடத்திச் செல்ல ஒரு தலைவன் இல்லை. அவர்களுக்கு லோடியிடம் வெறுப்பும்கூட ஏற்பட்டிருந்தது.

> இந்தப் பாபர் தான் அயோத்தியில் உள்ள இந்துக் கோயிலான இராமர் கோயிலை இடித்து பாபர் மசூதியை நிர்மாணித்தார் என்றும், தற்போது அந்த மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியஇந்துக்கள் அவ்விடத்தில் மீண்டும் இராமர் கோவிலை உருவாக்க வேண்டும்மென்று முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

### துப்பாக்கிப் போர்

மேலும் பாபரின்படைவீரர்கள் கணக்கற்ற துப்பாக்கிகளைப் போரில் பயன் படுத்தினார்கள். டில்லிப்படை அதற்குமுன் துப்பாக்கியையே பார்த்ததில்லை. எனவே, நெருப்புக் கக்கும் துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் கண்டு லோடியின் படை பயந்து ஓடி விட்டது. முதலாவது பானிப் பட்டுப் போர் 1526 ல் நடந்தது. வரலாற்றுப் புகழ் பெற்றது. போரில் வெற்றி பெற்ற பாபர் தன் செல்வத்தை எல்லாம் தம் படைவீரர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார், அவர்களும்தம் நாட்டிற்குப் போகாமல் டில்லியிலேயே தங்கி விட்டார்கள்.

சிலநாட்களுக்குப்பின்பாபர் உதய புரியின் மன்னரான ராணா சங்கராம்சிங்கை எதிர்த்துப் போரிட்டார். கான்வா என்ற இடத்தில் ரஜபுத்திரர்கள்பாபரின்படையை வீராவேசத்துடன் எதிர்த்தனர். ஆனாலும், பாபர் இங்கும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான ராஜபுத்திர வீரர்களைக் கொன்று வெற்றியும் பெற்றார். இப்ராகிம் லோடியாவது பலமற்றவன் ஆனால் ராணா சங்கராம்சிங் மிக்க பலம் உடையவர். அப்படிப்பட்டவரைப் பாபர் வென்று வடஇந்தியாவில் தன் ஆட்சியை நிலை நிறுத்தினார். பாபர் இலக்கியத்தில்ஈடுபாடு கொண்டவர் அவர் எழுதிய சுயசரிதம் 'பாபர் நாமா' மிகவும் புகழ் பெற்ற நூல்.

### மகனுக்காகப் பிரார்த்தனை

பாபரின் மகன் ஹுமாயூன் நோயுற்றுப் படுத்துக்கிடந்தான். வைத்தியர்களால் அவனைக் குணப்படுத்த முடியவில்லை; அப்போது பாபர் தம் மகனின் படுக்கையை மூன்று முறை சுற்றி வந்து 'கடவுளே! என் மகனைக் காப்பாற்று. அவனுக்குப் பதிலாக வேண்டுமானால் என் உயிரை எடுத்துக் கொள்' என வேண்டினார் அப்போதிலிருந்து ஹுமாயூனின் உடல் தேறலாயிற்று ஹுமாயூன் குணமடைய அடைய பாபர் நோயுற்றுப்படுத்தார் 1530ல் அவர் இறந்து போனார். பாபரின் தாய் மங்கோலிய வம்சத்தைச் சேர்ந்தவளாதலால்பாபரின்வம்சத்தவருக்கு மொகலாயர்கள் என்றபெயர் ஏற்பட்டது. 1526ல் பாபர் ஆரம்பித்த மொகலாய ஆட்சி 1857 வரை நீடித்திருந்தது.

நன்றி

அம்புலிமாமா

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1896)

# நிமலராஜன் கொலை விசாரணை பொலிஸார்மேற் கொண்டுள்ளனர்

## நீதி அமைச்சர்பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை தொடர்பாக இப்பொழுது பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாக நீதி அமைச்சர் பட்டிவீரக்கோன் சர்வதேச பத்திரிகையாளர் தினத்தை முன்னிட்டு சர்வதேச பண்டார நாயக்கா மாநாட்டுமண்டபத்தில்நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் செய்தியாளர் சுதந்திரம் பற்றி எடுக்கப் படுகின்ற கவனம் போதுமானதாக இல்லை என்றுகூறினார்.

இம்மாநாட்டை இலங்கையின் பத்திரிகையாளர்கள் இணைப்பு அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதில் எதிர்கட்சித்தலைவர் ரணில்விக்கிரம சிங்கா பேசுகையில்,, தற்போது செய்தியாளர்களை பாதிக்கும் சட்டங்களை மாற்றி அமைப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்றார்.

பத்திரிகையாளர் ஆசிரியர்கள் அமைப்பின் செயலாளர் உபாலி தென்னக்கோன் உரையாற்றுகையில் ஊடக சுதந்திரம் தொடர்பான யோசனைகளைதமது அமைப்புஅரசாங்கத்திடம் சமர்பித்துள்ளது எனக்கூறினார். (ம)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1897)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த உதவு தொகை

யாழ் மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத்தொகையொன்றினை வழங்குவதற்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்களது நியமனங்கள் உட்படஅவர்கள் சேவைகள் யாவும் ஒரு ஒழுங்குமுறைக்குள் கொண்டு வரப்படவுள்ளதாக அமைச்சர்மேலும் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உரிய மாதாந்த கொடுப்பனவு ஒழுங்கீனமற்று இருப்பதாகவும் இதனால் அவர்களது ஆசிரிய சேவையின் முழுப் பயன்பாட்டையும் பெறமுடியாமல் இருப்பதாக அமைச்சரின் கவனதுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்துஇன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளைதிவசம்உட்பட குடாநாட்டின் பல இடங்களிலும் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈ.பி.டி.பி.நிதியி'இருந்துமாதாந்த உதவித்தொகை வழங்கப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

# கலாசாரமண்டபத்திலிருந்து ராணுவம்வெளியேறசம்மதம்

வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக வவுனியா மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் ரகுசிவகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் கடந்த 5வருடங்களாக இராணுவத்தினர் அங்கு முகாமிட்டிருந்ததை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்புகொண்டதை அடுத்து பாதுகாப்பு அமைச்சு இராணுவத்தை வெளியேறுமாறு பணித்ததை அடுத்து இராணுவத்தினர் வெளியேற சம்மதம் தெரிவித்துள்ளனர். (ம)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

[வவுனியா]

அக்கினிச்சுவாலை -1 இராணுவ நடவடிக்கையை எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் உயிரிழந்த போராளிகளின் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு:

- சங்கீதா [எம்ச் ஜெனிஸ்ரலா] வவுனியா
- ஆவுதி [மகாலிங்கம் றஜனி] மன்னார்
- சாலினி [சுப்பிரமணியம் சுபாசினி] கொழும்பு
- சின்வேங்கை [சிவராசலிங்கம் சிவாஜினி] மாங்குளம்
- சுமலிசை [குமாரசாமி லதா] யாழ்ப்பாணம்
- குயிலினி [மதுரைவீரன் செல்வி] விஸ்வமடு
- பகீரதி [கிருஷ்ணசாமி ரஞ்சினி] புளியங்கொப்பனை
- வான்அரசி [மாறன் சிவசுகி] யாழ்ப்பாணம்
- சமர்விழி [குணம் ஜெகதீஸ்வரி] யாழ்ப்பாணம்
- குலமகள் [தங்கேஸ்வரன் விஜிதா] யாழ்ப்பாணம்
- தங்கம் [குமாரசாமிவசந்தமலர்] கிளிநொச்சி (இ)

# விஜயகுமாரதுங்காவின் சிலை அமைப்பு நிகழ்வு பிற்போடப்பட்டது

யாழ். நகரமையத்தில் இன்று நடைபெறவிருந்த அமரர் விஜயகுமாரதுங்காவின் சிலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் வி. தங்கராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்று நடைபெறவிருந்த அமரர் விஜயகுமாரதுங்காவின்சிலைக்கான அடிக்கல் நாட்டு வைபவத்திற்கு இரண்டு அமைச்சர்கள் வருகை தர இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. [ந]

### ஆணையாளராக..

ஸ்ரலண அறிக்கைகளை அண்மையில் ஆளுநரிடம் கையளித்திருந்தார்.

இதனையடுத்து சிவில் நிர்வாக சேவையில அனுபவத்திறன் வாய்ந்த இராமலிங்கம். மாநகர சபையின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சியைச் சேர்ந்த இவர் மக்களுடன் அன்பாகப் பழகும் நிர்வாகத்திறமை மிக்கவரென அனைவராலும் பாராட்டப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [ந]

### புலமைப்பரிசில்..

களுக்குஅமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இப் புலமைப் பரிசில் திட்டம அமுல்ப்படுத்துவதையடுத்து குடாநாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மூவாயிரம் முதல் நாலாயிரம் வரையிலான உயர்தரவகுப்பு மாணவர்கள் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. [ந]

# கூட்டணியின் மனுவை ரத்து செய்யக்கோரிக்கை

(கொழும்பு)

யாழ்மாவட்டத் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யக் கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மனுவை செல்லுபடியற்றதாகத் தீர்ப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தாக்கல் செய்திருந்த மேற்படிமனுவில் முதலாவது பிரதிவாதியாக ஈ.பி.டி.பி யின் செயளாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாகுறிப்பிடபட்டுள்ளார்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ,மனுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் வழக்கினை நடாத்துவதற்குப் போதியதாக இல்லை என வாதிட்டுள்ளார்.

இந்தமனுவை செல்லுபடியற்றதாக மாற்றும் விடயத்தில் எதிர்ப்புகள் காணப்பட்டால் யூலை மாதம் 12ம் திகதிக்குள் போதிய ஆதாரங்களை சமர்பிக்க வேண்டுமென்று மேல் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சடலமாக மீட்பு

மூன்று நாட்களாக காணவில்லையென்று தேடப்பட்ட குடும்பஸ்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையில்இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் எஸ். கனகசபை (வயது 51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

### படையினரின்..

பெற்றது.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாழி செபஸ்தியன் கெனடி (வயது 34) என்பவரே பவுஸர்மோதியதில் பலியானவராவார்.

இவரது சடலம் மரணவிசாரணையின் பொருட்டு யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. [வ-2,102]

### புலிகள்மீது..

ரிகா எரிக்சோல்ஹெய்மிடம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த யுத்தநிறுத்தத்தை 'வழமையான நடைமுறைகளுக்கு அப்பால் வெளிப்படையாக அறிவிக்கப்படாத வகையில் அரசு அமுல் படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் சம்பந்தமான அரசின் விருப்பத்தை அடுத்து நம்பிக்கையுடன் எரிக்சோல்ஹெய்ம் நோர்வே திருப்பியுள்ளதாகவும் இது பற்றி புலிகளிடம் அறிவிப்பாரெனவும் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா, கனடா, நோர்வே ஆகிய நாடுகளின் அழுத்தங்களை அடுத்தே ஜனாதிபதி சந்திரிகா இந்த உத்தியோகப்பற்றற்ற யுத்த நிறுத்த முடிவினை எடுத்ததாகவும் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இராணுவத்தில் உள்ள சில உயர் அதிகாரிகள் தொடர்ந்து போரை நடத்துவதில் தமக்குள்ள அதிருப்தியை ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவித்திருப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். [வ]

### பொலிசார்...

இதன்போது இருவர் கொல்லபட்டதுடன் மூவர்காயமடைந்தனர் காயமடைந்த மூவரும் மாத்தறை ஆஸ்பத்திரியில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சுடப்பட்டவாகனத்தில் சென்றவர்கள் கொள்ளைக் கோஸ்டியைச்சேர்ந்தவர் என்றுஅடையாளம் காணப் பட்டுள்ளது. (வ)

# அபிவிருத்தி குழு கூட்டம் 14ம் 15ம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தின் அபிவிருத்திக்குழுக்கூட்டமும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் இம்மாதம் 14ம் 15ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் மாவட்டஅபிவிருத்திக்குழுத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு கிழக்குமாகாண ஆளுனர்மேஜர் ஜெனரல்அசோகா ஜெயவர்த்தனா ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழ்கள் யாழ்மாவட்டபாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும்அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுளது. (ம 2, 6)

### எரிக்சோலின்..

கொண்டு கொழும்பு வந்திருந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க, இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தி ஆகியோருடன் இனப்பிரச்சினை தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் தொடர்பாகவும் பல சுற்றுப்பேச்சுக்களை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. [வ]

### வன்னிப்

தேசத்திற்கு சென்றுள்ளனர்

சுமார் மூவாயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் வன்னிப்பகுதியில் குவிக்கப் பட்டுள்ளதால் மீண்டும் ஒரு அக்கினிச்சுவாலை ஆரம்பமாகலாம என்றுவன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மக்கள் பதற்றத்துடனும், அச்சத்துடனும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ம]

### படையினரின்..

வைக்கப்பட்டிருந்த இரண்டு நிலக்கண்ணிகள் வெடித்ததில் படை அதிகாரி ஒருவரும் ஐந்து படைவீரர்களும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் அறுவரும் கிளாலிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயமே நிலக்கண்ணியில் அகப்பட்டுக் காயமடைந்தனர், இவர்கள் பலாலி இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (இ-ப)

# கலைஞருக்கு சொத்து எப்படி வந்தது?

## வை. கோ. கேள்வி

நான் பரம்பரைப் பணக்கார வம்சத்தில் பிறந்தவன். முப்பது மைல்களுக்கு அப்பால் நின்று பார்த்தால் தெரியும் எனது தாத்தாவின் வீடு

அந்தக் காலத்திலேயே 35 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகைக்கு வங்கி வைப்பு இருந்ததுஆனால்கலைஞர்கருணாநிதியிடம் என்னசொத்து இருந்தது. இப்போது உள்ள சொத்து எப்படி வந்தது. கணக்கு காட்ட கலைஞர் தயாரா?

இவ்வாறு கலைஞரைச்சாடி கேள்வி எழுப்பியிருக்கிறார் ம.தி.மு.க தலைவர் வை. கோபாலசாமி.

சென்னையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய வை.கோமேலும்தெரிவிக்கையில் கலைஞர்கருணாநிதியின் பெயரில் கோடிக்கணக்கான சொத்து எப்படி உள்ளது.

இவை சம்பந்தமாக அவரால் கணக்கு காட்ட முடியுமா. உறவினர்கள் பெயரில் உள்ள வீடுகள் எத்தனை, இவை எப்படி வந்தன.

இவற்றை ஜெயலலிதா கேட்க முடியாது. ஆனால் வை. கோ. கேட்பான் எனக் கூறியுள்ளார். (இ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ நிறுவனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது